தொகுதி 8] [பகுதி 9

பாலர் கல்வி

(தென் இந்திய ஆசிரியர் சங்கத்தின்
மாதாந்தரத் தமிழ்ப் பத்திரிகை)

சுபானு ௵ மார்கழி ௴
DECEMBER, 1943

பிரசுர கர்த்தர்கள்:

தென் இந்திய ஆசிரியர் சங்கம்
10, ஹைரோட், திருவல்லிக்கேணி, மதராஸ்.

வருஷ சந்தா
உள் நாடு ரூ. 2—0—0
வெளி நாடு
F.M.S.S.S. ஷில்லிங் 4

தனிப் பிரதியின் விலை:
உள் நாடு ரூ. 0—4—0
வெளி நாடு ரூ. 0—6—0

பொருளடக்கம்

பக்கம்

1. ஆரம்ப பாடசாலை புதிய பூகோள பாடதிட்டம் 433
—K. ராமச்சந்திர ராவ்

2. பூகோள பாடம் 438
—A. கோவிந்தசாமி

3. சரித்திரபாட போதனை 445
—M. K. சிவராமன்

4. செய்தித் திரட்டு 450

5. பத்திராதிபர் குறிப்புகள் 455

சந்தாதார்களுக்கு அறிக்கை

சந்தாதார்களுக்கு ஞாபகப் படுத்தும் பொருட்டு பாலர் கல்வியின் சந்தா எந்த மாதத்துடன் முடிவடைகிறதோ அந்த மாதப் பத்திரிகையில் அச்சந்தா நம்பர்களைப் பிரசுரிக்கிறோம். சந்தாதார்கள் அதை முக்கியமாகக் கவனித்து சந்தா தொகையைத் தவக்கமில்லாமல் முன்பணமாக அனுப்பும்படி கேட்டுக்கொள்ளுகிறோம். தற்சமயம் அசௌகரியமாயிருந்தால் சந்தா அனுப்பும் தேதியைக் குறித்து உடனே ஒரு கார்டு எழுதியனுப்பவும். தவறினால் வி. பி. அனுப்பி சந்தாவை வசூலிக்க நேரிடும்.

தவிர ஒவ்வொரு மாதமும் சஞ்சிகை 25உக்குள் கிடைக்காவிட்டால் உடனே தெரிவிக்கவேண்டும். அதற்குப் பிறகு வரும் விண்ணப்பங்கள் கவனிக்கப்படமாட்டா.

1943 டிசம்பர் மாதத்துடன் முடிவடையும் சந்தா நம்பர்கள் :—

சென்னை — M. 28, 41.
செங்கற்பட்டு — Ch. 2. 7. 10. 12. 13, 14, 16, 21, 25, 27, 38, 42, 43.
சித்தூர் — CT. 7.
வட ஆற்காடு — NA. 11. 16-A. 18. 19, 20. 30,
தென்னாற்காடு — SA. 7. 10. 15. 15-A. 20-A. 23. 23-A, 33, 79, 86.
தஞ்சாவூர் — Tan. 19, 24, 35-A. 36. 52, 61. 63. 64, 85, 92, 99-124.
திருச்சி — Tri. 30, 33, 41. 43, 46.
ராமநாதபுரம் — Rd. 22, 33. 34-A, 46, 47, 48, 49, 74.
மதுரை — Md. 10-A, 16, 24. 40. 84.
திருநெல்வேலி — Tin. 12-A. 14. 16, 21. 31. 60, 62, 84, 85, 86, 87.
சேலம் — S. 6-A, 9, 16. 45, 47. 51, 62. 64.
கோயமுத்தூர் — Co. 1, 1-A, 16, 18-A, 19, 25, 34, 53.
திருவாங்கூர் — Tra. 6.
வெளியூர்கள் — Mis. 53.

குறிப்பு :—சந்தா நம்பர்கள் விலாசத்துடன் கொடுக்கப்பட்டிருக்கின்றன. இந்த ஆபீஸுக்கு அனுப்பும் ஒவ்வொரு கடிதத்திலும் மணியார்டர் கூபன் களிலும் சந்தா நம்பரைக் கட்டாயம் குறிப்பிடவும்.

—பத்திராதிபர்

பாலர் கல்வி

தொகுதி 8	1943 ஞு டிசம்பர் மீ ஸுபாநு ஞு மார்கழி மீ	பகுதி 9

ஆரம்ப பாடசாலை புதிய பூகோள பாட திட்டம்

இரண்டாம், மூன்றும், வகுப்புகள்

By. K. Ramachandra Rao,

[*Headmaster, Board School, Erukkur, (via) Coleroon, Tanjore District*]

சென்ற 1941-ம் ஞு புதிதாக வெளியிடப்பட்ட பூகோள பாட திட்டத்தின்படி ஆரம்ப பாடசாலைகளில் 2 முதல் 5 வகுப்பு வரையில் பூகோள பாடத்தைக் கற்பிக்க வேண்டும் என்பது கல்வியிலாக்காவின் அபிப்பிராயமாகும்.

புதிய பூகோள பாட திட்டத்தின் நோக்கம்.

பழைய பூகோள பாட திட்டப்படி 5-வது வகுப்பு வரையில் வாசித்த ஒரு பையனை இந்தியாவிற்கு எந்தத் திசையில் ஆப்பிரிக்கா இருக்கிறது? 'வின்னி பெக் என்பது எதற்கு தலைநகரம்' என்ற இவை போன்ற கேள்விகளைக் கேட்டால் அவனால் பதில் சொல்ல முடியாது! ஆனால் புதிய பூகோள பாடதிட்டப்படி 5-வது வகுப்பு வாசித்த ஒரு பையனை ஐந்து கண்டங்களைப் பற்றி எந்தக் கேள்வி கேட்டாலும் அவன் ஸ்தூலமாகவாவது 'டக்டக்' என்று தயங்காமல் பதிலளிப்பான். இதனால் பழைய பூகோள பாட திட்டத்தின்படி 5-வது வகுப்பு படித்த ஒரு பையனை விட புதிய பூகோள பாட திட்டத்தின்படி 5-வது வகுப்பு படித்த பையனுக்கு பரந்த உலகஞானம் உண்டாக ஆதாரம் இருக்கிறது என்று தெரிகிறதல்லவா! கிராமாந்திரங்களில் உள்ள பையன்கள் பெரும்பாலும் 5-வது வகுப்புவரையில் படித்து நின்று விடுவதால் ஸ்திரமான உலக ஞானத்தை அடைய இப்புதிய பூகோள பாட திட்டம் மிகவும் உபயோகக்ரமாயிருக்கிறதென்று கருத வெள்ளிடை மலைபோல் விளங்குகிறது. எனவே இத்திட்டம் மிகுந்த சீரிய நோக்கத்துடன்

"உலகத்தோ டொட்டொழுகல்" என்பதற்கு இணங்க அமைந்திருக்கிற தென்னலாம்.

ஆசிரியர்களுக்கு இப்பாட திட்டத்தின்படி போதிப்பதிலுள்ள குறைகளும் கூப்பாடுகளும்—அவற்றிற்கான நிவர்த்தியும்.

இப்புதிய பாட திட்டத்தின் நோக்கமென்ன? இப்பாட திட்டம் ஆரம்ப பாடசாலைகளுக்கு எவ்வாறு ஏற்றவை? இப்பாட திட்டத்தின்படி பாடங்களை வெற்றிகரமாயும் உற்சாகத்தோடும் நடத்த தம்முடைய போதனை முறைகளையும், போதனை சாதனங்களையும் எவ்வாறு அமைத்துக் கொள்ளவேண்டும்? என்று சிறிதுகூடச் சிந்தித்துப் பார்க்காமல் 'இதென்ன கல்போர்னியாவாம்! செங்ஙோம்!! எஸ்கிமோவாம்!!! இன்னும் என்னென்னமோ இருக்கே அப்பாடா! இது யாரால் முடியும்—இதெல்லாம் ஹைஸ்கூல் பையன்களுக்கான பாடமல்லவா? இந்த இழவையெல்லாம் எந்த ஜென்மாந்திரத்திலியோ இல்லையா படித்தோம் என்று சில ஆசிரியர்கள் (பாட திட்டத்தைக் கண்ணால் கூட பார்க்காத சிலர்) முணு முணுக்கின்றனர். சிலர் ஒரே கூப்பாடு போடுகின்றனர். இங்கு ஆசிரியர்களை இடித்துக் கூறுவதாக கருதற்க. அவர்கள் முன்னேற்றங் கருதியே கூறுவதாகும்.

இவ்வாறு கஷ்டப்பட அவசியமேயில்லை. இப்புதிய பூகோள பாடதிட்டம் **Concentric Method**-ஐ அனுசரித்ததாயிருக்கிறது. இரண்டாவது வகுப்பில் எஸ்கிமோவைப் பற்றி சுருக்கமாய் வாசித்த ஒரு பையன் V-வது வகுப்பில் கொஞ்சம் விவரமாய் வாசிக்கிறான். வேறொன்றும் வித்தியாச மில்லை.

பூகோள பாடதிட்டத்திற்கான **(Revised Syllabus)** புதிய சிலபஸ் சுலபமாய்க் கிடைக்காதது. (உபாத்திமைச் சங்கக் கூட்டங்களில் ஷை சங்கக் காரியதரிசியைக் க. ப. வில் புதிய பூகோள பாடதிட்டத்தை எழுதி வைக்குமாறு திட்டம் பண்ணி அதை ஆசிரியர்களை எழுதிக் கொள்ளுமாறு அந்தந்த சங்கத் தலைவர்கள் திட்டம் செய்திருப்பதால் "இக்குறை நிவர்த்தியாகலாம். அல்லது 'மனமிருந்தால் வழியுண்டு' என்றபடி சமீபத்திலுள்ள ஹையர் எலிமெண்டரி ஸ்கூலில் இருந்து ஒரு புதிய சிலபஸைப் பார்த்து ஊக்கமுள்ள ஆசிரியர்கள் காபி செய்து கொள்ளலாம்.

பூகோள பாட சம்பந்தமாய் ஆசிரியருக்கான ஊக்கங்களும்—போதனை முறைகளும்.

2 முதற் 5 வகுப்பு வரையில் பூகோள பாடங்களை நடத்த சுலபமாய் சிலபஸூம் கிடைப்பதில்லை. புத்தகங்களும் இல்லையென்று வைத்துக் கொள்வோம். இதனால் பாடங்களை நடக்காமல் இருக்க விட ருமட

யுமா. அதற்கென்ன வழியென்று சிறிது ஆராய்ந்து பார்த்தால் ஒரு வழி புலனுகிறது. அதுதான் சார்ட்டு முறை என்னும் சிரிய முறை. இதென்ன சார்டின் மூலம் 2 முதல் 3 வகுப்பு வரையில் எவ்வாறு பூகோள பாடத்தை முழுதும் நடத்த முடியும் என்று நினைக்கலாம். பின்கண்ட முறைகளைக் கவனித்தால் இவ்வளவுதானு பிரமாதம் என்று தோன்றும்.

உதாரணமாக 3-வது வகுப்புக்கு பலநாட்டுக் குழந்தைகளைப் பற்றி சொல்லிக்கொடுக்க எவ்வாறு சார்ட்டுமூலம் போதிக்கலாம் என்று ஆராய்வோம்.

ஒவ்வொரு நாட்டில் உள்ள குழந்தைகளுக்கு அந்தந்த தேசத்து வழக்கப்படி வெவ்வேறு பெயர்கள் இருக்கின்றன. நடை, உடை, பழக்க வழக்கம், உணவு இவைகள் ஒரு தேசத்திற்கு ஒரு தேசம் மாறுபட்டிருக்கின்றன.

உதாரணமாக 3-வது வகுப்புப் பையனை 'மாங்டீன்' என்னும் பையன் எந்த தேசத்தில் இருக்கிருன்? 'துயூரி'யின் ஆகாரம் என்ன? அவன் எந்த தேசத்தில் இருக்கிருன்?

என்ற கேள்விகளைக் கேட்டால் அவன் திட்டவட்டமாய் பதில் சொல்லாமல் ஒன்று கிடக்க ஒன்று சொல்லுகிருன்.

இதற்குப் பின்கண்டபடி சார்ட்டை வரைந்து காட்டி அதைப் பார்த்துப் பலதடவை வாசிக்கவும் எழுதவும் செய்தால் புதிய பூகோள பாட திட்டப்படி பூகோள பாடங்களை வெற்றிகரமாய் நடத்த முடிகிறது என்பது எளியேன் கண்ட அனுபவம். (இவ்விதம் தயாரித்த சார்ட்டுகளை மௌன வாசிப்பிற்கும் உபயோகப்படுத்தலாம்.)

பலநாட்டுக் குழந்தைகள்

தேசத்தின் பெயர்	குழந்தையின் பெயர்
லாப்லாந்து	துயூரி
மத்திய ஆப்பிரிக்கா	பீலா
ஸ்டெப்ஸ் என்னும் இந்தியாவின் வடமேற்குப் பாகம்	செங்கீஸ்
பாலஸ்தீனம்	ராகேல்
காஷ்மீரம்	மஹீந்தர்
வங்காளம்	இந்திராநாத்
நீலகிரி	நஞ்சன்
பர்மா	மாங்டீன்
தஞ்சாவூர்	மாணிக்கம்

துயூரி என்னும் லாப்லாந்துச் சிறுவன்

லாப்லாந்தில் வசிக்கிறான். பனிக்கட்டிப் பிரதேசம். கூடாரத்தில் வசிக்கிறான். இக்கூடாரம் தோலினால் செய்யப்பட்டது.

தோலால் செய்யப்பட்ட கால் சட்டை, சட்டை, தொப்பி, மேல் ஜோடு, கைக்கு உறை இவைகளைத் தரித்துக்கொள்ளுகிறான்.

மான்கறி, காப்பி, மீன் முதலியவை ஆகாரம். ஓநாய்—கடம்பை மான்கள் முதலிய மிருகங்கள் இருக்கின்றன.

துயூரியின் வண்டிக்கு 'ஸ்லெட்ஜ்' என்று பெயர். இதற்கு சக்கரம் கிடையாது. பனிக்கட்டியில் வழுக்கிக்கொண்டு போகும். கடம்பை மான் இதை இழுக்கும்.

இம்மாதிரியான சார்ட்டுகளைத் தயார்செய்வ தெப்படி?

மேலே சொன்னமாதிரி ஒவ்வொரு நாட்டுக் குழந்தைகளைப் பற்றிச் சுருக்கமாய், வகுப்பு அறையில் உள்ள க. ப. வில் கர்ப்பி ளொசில் எழுதி, அதை 5-வது வகுப்புப் பிள்ளைகளைத் தங்கள் காப்பி நோட்டில் நன்றாக நிறுத்தி எழுதிக்கொள்ளும்படி குறைந்தது வாரத்திற்கு இரண்டு வீதம் 2-முதல் 3 வகுப்புகள் வரையில் சார்ட்டுகளைத் தயார் செய்துகொள்ளலாம். (காப்பி நோட் ½ தாள் சைசில் இருந்தால் நல்லது) இம்மாதிரி தயார்செய்த சார்ட்டுகளில் பொருத்தமான சித்திரங்களை வரையலாம். அல்லது படங்களைக் கத்தரித்து ஒட்டலாம்.

இம்மாதிரி தயாரித்த சார்ட்டுகளை காலண்டர் ஷீட்டுகளைப்போல் ஒன்றன்பின் ஒன்றாக விஷயங்கள் கோர்வையாக இருக்கும்படி அடுக்கித் தைத்து அந்தந்த வகுப்புகளில் தொங்கவிட்டு வைக்கலாம்.

பாலைவனச் சோலையை (Oasis) தயார்செய்வது எப்படி?

ஒரு சதுரமான அல்லது நீண்ட சதுரமான கள்ளிப் பலகையில் கொஞ்சம் கோந்தைக் கரைத்து ஊற்றியோ, அல்லது வஜ்ரப் பசையை காய்ச்சி ஊற்றியோ அதன்மேல் மணலைக் கொட்டிப் பரப்பிவிட்டால் மணல் அப்படியே ஒட்டிக்கொள்ளும். இதில் கொஞ்சம் குழித்துக் களிமண்ணினால் ஒரு சிறிய யாத்தி கட்டி கொஞ்சம் தண்ணீர் விட்டு வைக்கவும். (தண்ணீர் தினந்தோறும் விடவும்) அட்டையில் கத்தரித்து எடுத்த ஒரு ஒட்டகத்தை மணல்தட்டில் ஓர்பக்கத்தில் நிறுத்திவைக்கவும். நெருப்புப்பெட்டிகளால் சிறிய வீடுகள் அமைக்கவும். பேரீச்ச மரம் போன்ற மரங்களை அமைக்க சிறிய நெட்டிபோன்ற கட்டைத் துண்டுகளை வர்ணம் பூசி நிறுத்தி அதன்மேல் காணக்கூடிய மட்டைகளைக் குறித்துக் காட்டபனையோலைகளைக் கத்தரித்து பச்சை வர்ணம் கொடுத்து நெட்டி

போன்ற அக்கட்டையின்மேல் மட்டைகள் அமைந்திருப்பதைப்போல் அமைக்கவும்.

நொச்சிக் குச்சிகள் அல்லது பூவரசு குச்சிகள், கோரைகள், கள்ளிப் பலகைகள், நெருப்புப் பெட்டிகள், மண்ணெண்ணெய்த் தகரங்கள், சணல் முதலியவற்றால் பரண்கள்—மிதக்கும் வீடு—மிதக்கும் தோட்டம் முதலியவைகளை அமைத்து வைத்துக்கொண்டு காஷ்மீரம்—பர்மா முதலிய தேசத்துச் சிறுவர்களைப்பற்றி போதிக்கலாம்.

முடிவு:—இதர நாட்டுக் குழந்தைகளைப்பற்றி முதலில் கதைகளாகச் சொல்ல வேண்டும். இப்பகுதியில் வரும் அயல்நாட்டுக்குழந்தைகள்—இந்திய நாட்டுக் குழந்தைகள் சம்மந்தமான பூகோள பாடம் பல்வேறு வகையான கைவேலைகளாக அமைந்துள்ளவென்று சொல்லலாம். ஏனெனில் அந்தந்த நாட்டுக் குழந்தைகளைப்பற்றி பிரஸ்தாபிக்கப்பட்டவைகளுள் வஸ்துக்களைச் செய்தல், விளக்கப்பட்ட சம்பவங்களை மணல் பெட்டியில் வரைந்து காண்பித்தல், உருவங்கள் அமைத்தல், அல்லது நடித்துக் காண்பித்தல் முதலான ஏதாவது ஒரு கைவேலை முறையால் விளக்கப்பட வேண்டியிருக்கிறது. 4 முதல் 5 வகுப்புகளுக்கு புத்தகங்கள் ஏராளமாக வந்திருக்கின்றன. ஆனால் 2 முதல் 3 வகுப்புகளுக்கு புத்தகங்கள் அவ்வளவு ஏராளமாக வெளிவரவில்லை. அப்படி வெளிவந்திருந்தாலும் 2 முதல் 3 வகுப்புகளுக்கு பாஷைக்கான பாட புத்தகத்தைத் தவிர மற்றப் பாடங்களுக்கு புத்தகங்கள் உபயோகப்படுத்தக்கூடாது என்பது கல்வி இலாகா அதிகாரிகளின் அபிப்பிராயமாகும். இக்காரணங்களை யுத்தேசித்தே ஏனைய ஆசிரியர்களுக்கும் இத்தாழ்ந்த யோசனை ஒருவாறு பலனளிக்கும் என்று கருதி பாலர் கல்வியின் வாயிலாக பிரசுரம் செய்யுமாறு அதன் ஆசிரியரைக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

மேலே கூறியபடி தயாரித்து வைக்கப்பட்ட உபகரணங்களே ஓர் கிராம பாடசாலையில் காணப்படவேண்டிய உபகரணங்களாகும். இவைகள்தான் ஓர் பாடசாலையின் அபிவிருத்தியைப்பற்றி அறிந்துகொள்ள ஓர் அளவுகோல் போன்றிருக்கும்.

மெய் வருத்தம் பாரார்..........கருமமே கண்ணாயினர்...

பூகோள பாடம்

BY **A. Govindasamy**, *Teacher, Board School, Thanthani. Aranthangi Taluk.*

சகாரா சிறுவனைப் பற்றிய கதை.

இரண்டாம் வகுப்புக்கும் பூகோள பாடம் என்பது புதிய பாட திட்டத்தில் சேர்க்கப் பட்டிருக்கிறது. பற்பல தேசக் குழந்தைகளுடைய கதையை குழந்தைகளுக்கு போதிக்க வேண்டும். கல்வியிலாக்கா திட்டத்தை அளித்தார்களே தவிர சதையையோ அல்லது முறையையோ அளிக்க வில்லை நமக்கு. கல்வியிலாக்காவே விஷயங்களைச் சேகரித்து முறையோடு கூடிய கதையை நமக்குப் புத்தக ரூபமாக அளித்திருந்தால் எவ்வளவோ நலமாக இருக்கும். இன்று ஆசிரியர்கள் கஷ்டப்பட வேண்டுவதில்லை. அந்த நிலைக்கு வர நாம் இன்னும் கொடுத்து வைக்க வில்லை என்றுதான் சொல்ல வேண்டும்.

பாட திட்டத்தில் சொல்லப் பட்டிருக்கிற குழந்தைகளுடைய வாழ்க்கைச் சரித்திரத்தைப் பற்றிய கதையை தெரிந்துகொள்வது ஆசிரியர்களுடைய பொறுப்பிலேயே விடப்பட்டிருக்கிறது. விஷயத்தைச் சேகரித்துக் கொள்வதும் முறையோடு கூடிய கதையை அமைத்துக் கொள்வதும் ஆசிரியர்களுடைய கடமையாகி விட்டது.

எவ்வளவோ விஷயம் தெரிந்தாலும், கதை சொல்வதிலும் ஒரு பாண்டித்தியம் இருக்கத்தான் வேண்டும். சிறுவர்கள் கதையை ரசிப்பது என்பது சொல்லுகிறவர்களுடைய கற்பனா சக்தியையும், நடையையும் பொருத்திருக்கிறது., அத்தைப் பாட்டி முறையில் கதை சொன்னால் பலனளிக்காது. கதையில் குழந்தைகளைச் சிரிக்கவைக்க வேண்டிய ஹாஸ்யமும், குழந்தைகள் உணர்ச்சியோடு கேழ்ப்பதற்கு வேண்டிய பல நூதன விஷயங்களும் சேர்க்கப் பட்டிருக்கவேண்டும். கீழே கொடுக்கப்பட்டிருக்கிற கதையை வாசித்துப் பார்க்க வேண்டுகின்றேன்.

கதை

இரண்டு வருஷங்களுக்கு முன்னால் நான் சென்னைப் பட்டணத்தில் இருந்தேன். அப்பொழுது நான் அங்கே படித்துக் கொண்டிருந்தேன். ஒருநாள் காலை நேரம். நான் குடியிருந்த வீட்டுக்கு முன்னால் இருந்த ஒரு பெரிய பொட்டலில் ஒரு ஆகாய விமானம் (ஏரோபிளேன் அல்லது பறவைக் கப்பல்) வந்து இறங்கிற்று. அதைப் பார்ப்பதற்கு நான் விழுந்தடித்துக் கொண்டு ஓடினேன். அந்த விமானத்தை ஓட்டிக் கொண்டு வந்த விமானி ரொம்பவும் நல்ல மனிதன். என்னை அருகில் அழைத்தார். நானும் போனேன். உன் பெயரென்ன என்று கேட்

டார். கோவிந்தசாமி என்றேன். உன் சொந்த ஊர் எது? என்று கேட்டார். மாயவரம். என்றேன். இப்படியே சுமார் ஒருமணி நேரம் இரண்டு பேரும் பேசிக் கொண்டிருந்தோம். நானும் அவரைக் கேழ்விகள் கேழ்க்காமல் விடவில்லை. அவர் ரொம்பவும் அன்போடு பேசிக் கொண்டிருந்த படியால் எனக்கு மிகவும் சந்தோஷமாகவே இருந்தது.

"இந்த விமானம் எங்கே போகிறது?" என்று விமானம் ஓட்டியைக் கேட்டேன். "இங்கிலாந்து தேசம் போகிறது" என்றார். என்னையும் அழைத்துக் கொண்டு போகிறீர்களா? என்று கேட்டேன்.

"நான் அழைத்துக் கொண்டு போகத்தயார்" என்றார். பிறகு விமானம் ஓட்டி எதையோ நினைத்துக் கொண்டு "உன் பெற்றோர்களை கேழ்க்க வேண்டாமா?" என்று கேட்டார். "அதைப் பற்றி நீங்கள் கவலைப் படவேண்டாம்" என்று சொல்லிக் கொண்டே டபக்கென்று விமானத்தில் ஏறி உட்கார்ந்து கொண்டேன்.

விமானி விமானத்தை ஓட்ட ஆரம்பித்தார். விமானத்தின் முகப்பில் இருக்கிற காற்றாடி சுற்றுவதும், இஞ்சின் சத்தம் போடுவதையும் காணக்காண எனக்கு சந்தோஷம் தாங்க முடியவில்லை. விமானம் மேற்கே நோக்கிப் போய்க்கொண்டிருந்தது. ஒரு பகல் ஒரு இரவு பிரயாணம் செய்து, மறுபகலிலும் பிரயாணம் செய்து கொண்டே இருந்தோம். திடீரென்று "ஐயயோ" என்றார் விமானி.

"என்ன சார்" என்றேன்.

விமானத்தில் ஒரு விசைக் கருவி கெட்டு விட்டது. விமானத்தோடு நாமும் பூமியில் விழப்போகிறோம் என்றார்.

நாம் இரண்டு பேரும் செத்து வல்லவா போய்விடுவோம் என்றேன் நான்.

"ஆமாம் பைத்தியம்" என்று ஆத்திரமாக பதில் சொல்லிவிட்டு எந்தெந்த விசையையோ முடுக்கித் திருகிக் கொண்டிருந்தார்.

எனக்கு ஒரே பயமாகப் போய்விட்டது. அப்பொழுது தான் எங்கள் குல தெய்வமாகிய பாவாடைராயனை நினைத்துக் கொண்டேன், "அப்பா, பாவாடைராயா! நான் உயிரோடு ஊருக்குப் போய்ச் சேர்ந்தால் உனக்கு ஒரு பெரிய பூஜை போட்டு, ஆட்டுக்கடாவும் வெட்டுகிறேன்" என்று வேண்டிக் கொண்டேன்.

விமானம் ஓட்டி ரொம்ப அவசரமாக ஒரு பெரிய குடை (பாரசூட்) ஒன்றை விரித்துக்கொண்டே "தம்பி! என் இடுப்பில் உட்கார்ந்து கொண்டு என் கழுத்தைக் கெட்டியாக பிடித்துக்கொள்" என்றார். நானும் உடனே அப்படியே செய்தேன். அவர் விமானத்தை விட்டு விட்டு ஒரே பாய்ச்சலாகப் பாய்ந்து கொடையில் தொங்குகிற கயிறுகளை பிடித்துக்கொண்டு தொங்கிக் கொண்டார். (ஆசிரியர் பாரச்சூட்டைப் போல சித்திரம் கரும்பலகையில் போட்டுக்காண்பிக்க) விமானம் தன்

ழாகப்போய் பூமியில் விழுந்துவிட்டது. குடையை விமானிபற்றிக் கொண்டு தொங்க, அவரை நான் பற்றிக்கொண்டு தொங்கினேன். குடை ஆகாயத்தில் மெதுவாகப் பறந்துகொண்டே பூமியை நோக்கி சிறிது சிறிதாகச் சென்று கொண்டிருந்தது. யாதொரு ஆபத்து மன்னியில் பூமியை அடைந்து விட்டோம்.

நாங்கள் இறங்கிய இடத்தைச் சுற்றிலும் பார்த்தேன். கண்ணுக் கெட்டியதூரம் வரையில் மணல் நிறைந்த பொட்டல், மரம், செடி, கொடி முதலியவைகளில் ஏதாவது ஒன்று பெயருக்குக்கூட முளைக்க வில்லை. எந்தக்காலத்திலும், மழை பெய்ததாகவோ, இனி மழை பெய்யப் போகிறதாகவோ தெரியவில்லை. தாங்கமுடியாத வெய்யல். அண்ட இடமும் இல்லை ; ஒண்ட நிழலும் இல்லை. கொஞ்சதூரம் அந்த மணலில் நடந்து பார்த்தேன். கால் அசந்துபோய்விட்டது. தொந்திமணலில் யாரால்தான் நடக்கமுடியும்.

"இப்பொழுது நாம் எங்கே இருக்கிறோம்" என்று விமானியைக் கேட்டேன்.

"சகாராபாலைவனம்" என்றார்.

"சகாராபாலைவனம் ஆப்பிரிக்கா கண்டத்தில் அல்லவா இருக்கிறது. அது உலகத்திலேயே பெரிய பாலைவனமாயிற்றே" என்றேன் நான்.

"ஆமாம், நாம் இப்பொழுது ஆப்பிரிக்கா கண்டத்தில் அதிலும் சகாராபாலைவனத்தில் இருக்கிறோம்" என்றார். இதைக் கேட்டவுடன் எனக்கு பெரிய ஆச்சரியமாகப் போய்விட்டது.

"இதை நாம் எப்படித் தாண்டப் போகிறோம்?" என்றேன்.
"ஆண்டவன்தான் வழிகாட்டவேண்டும்." என்றார் விமானி.

சுமார் இரண்டுமணிநேரம் அங்கேயே இருந்தோம். வெய்யல் தாங்கமுடியவில்லை. இதில் தண்ணீர் தாகம்வேறு சகிக்க முடியவில்லை.

இப்படி இருக்கும்போது தென் திசையில் அரை மைல் தூரத்தில் ஒரு ஒட்டகக்கூட்டம் ஒன்றன்பின் ஒன்றாகப் போய்க்கொண்டிருந்தது. ஒவ்வொரு ஒட்டகத்தின் பேரிலும் பிரயாணிகளும் மூட்டை முடிச்சுகளும் ஏற்றப்பட்டு இருந்தன. விமானம் ஓட்டி பெரிய கூப்பாடு போட்டு வெள்ளை வேஷ்டியை வீசிக் காண்பித்தார். பிரயாணிகள் எங்களைக் கண்டவுடன் ஒட்டகங்களை நிறுத்திவிட்டு எங்களை அவர்களிடம் வர வேஷ்டியை வீசிக்காண்பித்தார்கள். நாங்கள் இருவரும் ஒட்டகக்கூட்டங்களை நோக்கி நடந்தோம். நாங்கள் சமீபித்தவுடன் அவர்கள் எல்லோரும் "சலாம்மாலேகோம்" என்று சலாம் செய்தார்கள் நாங்களும் பதில் சலாம் செய்தோம்.

நீங்கள் யாரென்று அரபி பாஷையில் விசாரித்தார்கள். எனக்கும் அரபி பாஷை தெரியுமாகையால் எங்கள் கதையைக் கூறினேன்.

"முதலில் கொஞ்சம் குடிதண்ணீர் கொடுங்கள் பிறகு பேசிக் கொள்வோம்" என்றேன் நான்.

உடனே ஒரு சிறுவன் கீழே குதித்து ஒரு பெரிய தோல்பையில் இருந்த தண்ணீரை ஒரு கண்ணாடி டம்ளரில் ஊற்றிக்கொடுத்தான். நான் அண்ணாந்து டம்ளரை வாயில் படாமல் தூக்கிக் குடித்தேன். "சும்மா வாயில் வைத்து சாப்பிடுங்கள்" என்று பையன் சிரித்த முகத்தோடு கூறினான். பாலைவனத்திலும் அன்பு இருக்கிறதே என்று ஆச்சரியப்பட்டேன்.

உங்களுக்கு இஷ்டமான ஒட்டகத்தில் ஏறிக் கொள்ளுங்கள் என்று ஒட்டகக் கூட்டத்தார் கூறினார்கள். நான் தண்ணீர் கொடுத்த பையன் ஏறியிருந்த ஒட்டகத்தின்மேல் ஏறிக்கொண்டேன். ஒட்டகங்கள் பிரயாணம் செய்துகொண்டே இருந்தன.

"தம்பி, உன் பெயரென்ன?" என்று பையனைப் பார்த்துக் கேட்டேன்.

"ஷேக்தாவூது" என்றான் பையன்.

"எங்கள் ஊரில் உள்ள முஸ்லீம்கள் எல்லாம் இந்தமாதிரியான பெயர்தான் வைத்துக்கொண்டிருக்கிறார்கள்" என்றேன்.

"நாங்கள் மாத்திரம் என்ன? நாங்களும் முஸ்லீம்கள்தான்" என்றான் பையன்.

"எனக்குத் தெரியாமல் போய்விட்டது" என்றேன்.

"நீங்கள் சாப்பிடுகிறீர்களா?" என்றான் ஷேக்.

"நான் சாப்பிட்டு இரண்டு நாளாகிறது. கொடுத்தால் சாப்பிடுகிறேன்" என்றேன்.

"என்ன போங்கள். இது முன்னாலேயே தெரியாமல் போய்விட்டதே." என்று சொல்லிக்கொண்டே அவசர அவசரமாக மூன்று கோதுமை ரொட்டிகளையும், கொஞ்சம் பேரிச்சம்பழமும், கொஞ்சம் ஒட்டகத்தின் வெண்ணெயையும் ஒருதட்டில் வைத்து சாப்பிடுங்கள் என்று தட்டோடு கொடுத்தான்.

"தம்பி! இப்பொழுது எனக்கு பலகாரம் வேண்டாம். கொஞ்சம் சாதம் இருந்து கொடுத்தால் மிகவும் நன்றாக இருக்கும்" என்றேன்.

"சாதமா? அது என்ன அது! என்றான் பையன் ஆச்சரியத்தோடு.

"நெல் அரிசிச் சாதம்" என்றேன்.

நான் அதைப்பற்றி இப்பொழுதுதான் கேழ்விப்பட்டேன். எங்கள் உணவெல்லாம் கோதுமை ரொட்டி, பேரீச்சம்பழம், ஒட்டகத்தின் வெண்ணெ இவ்வளவுதான் என்றான் பையன்.

எனக்கு ஆச்சரியமாகப் போய்விட்டது. "தம்பி!" என்றேன். "ஏன்" என்றான். நானும் உங்கள் கூடவே இருந்து விடுகிறேனே" என்றேன் சிரித்துக்கொண்டே.

"உங்களுக்கு இஷ்டமாக இருந்தால் இருந்துவிடுங்களேன். ஆனால் பாலைவன வெய்யல் உங்களால் தாங்க முடியாது" என்றான் பையன்.

"உங்களுக்குத் தான் குடி தண்ணீர் தோல் பையில் அடைத்து வைத்துக் கொள்ளுகிறீர்களே, ஒட்டகங்களுக்கு தண்ணீர் எப்படி கிடைக்கும்" என்றேன்.

"ஒட்டகத்திற்கு ஒரு தரம் தண்ணீர் காட்டி விட்டால் ஒரு வாரம் வரையில் அதற்கு தண்ணீரே வேண்டியதில்லை. இயற்கையிலேயே ஆண்டவன் அந்த வசதியை அதற்கு அளித்திருக்கிறான்" என்றான் பையன்.

"அல்லாவினுடைய செயல். நமக்கும் இதைப்போல அமைக்காமல் போனானே" என்றேன். பையன் சிரித்தான்.

ஒட்டகங்களுக்கு தீனி வைக்கோலா? புல்லா? என்றேன்.

"இரண்டு மில்லை" காய்ந்துபோன பேரிச்சங்காயை அதற்குத் தீனியாக வைப்போம்.

வேப்பிலை அகப்பட்டாலும் ஒடித்துப் போடுவோம். வேப்பிலையை தின்பதற்கு ஒட்டகங்களுக்கு ரொம்பப் பிரியம். முள் செடிகளையும் பிடுங்கித் தின்னும் என்றான் பையன்.

"அது சரி. பேரிச்சங்காய் வைக்கிறீர்களே கட்டுபடியாகுமா?" என்று கேட்டேன்.

இவ்விடத்தில் பேரிச்சம் பழத்திற்கும், பேரிச்சங் காயிக்கும் குறைவே கிடையாது என்றான்.

"ஒட்டகங்கள் கொஞ்ச நாளைக்கு உணவு சாப்பிடாமலே இருக்க அதற்கு சக்தி உண்டாமே; அது எப்படி?" என்று கேட்டேன்.

"அதுவா! ஒட்டகத்தின் முதுகில் இருக்கிற கொண்டையினுள் கொழுப்பு இருக்கிறது. அதற்கு "புருடு" என்று பெயர். ஒட்டகம் பசியால் கஷ்டப்படும்போது அந்தக் கொழுப்பு கரைந்து உணவாகிறது" என்றான் பையன்.

"தம்பி, உனக்கு எழுதப் படிக்கத் தெரியுமா?" என்று கேட்டேன்.

"நான் பள்ளிக்கூடத்தையே பார்த்ததில்லை. நான் பிறந்ததிலிருந்து இன்று வரையில் என் தாயார் தகப்பனாரோடு சதா பிரயாணத்திலேயே இருக்கிறேன். நாங்கள் நிலையாக ஓரிடத்தில் தங்கி வசித்தாலல்லவா படிப்பதற்கு ஏதாவது வசதி ஏற்படும்." என்றான் ஷேக்.

உங்களுடைய தொழில்தான் என்ன? என்று பையனைக் கேட்டேன்.

"வியாபாரம் தான் எங்களுடைய தொழில். கோதுமை, பார்லி முதலியவைகளை கிராமத்தார்களிடமிருந்து விலைக்கு வாங்கிக்கொண்டு, ஒட்டகத்தின் மயிரால் ஆன கம்பளங்களை அவர்களிடம் விற்பனை செய்வோம்" என்றான் பையன்.

இதற்குள் ஒரு பெரிய பேரிச்சந் தோப்பை அடைந்துவிட்டோம்.

"இது என்ன? இந்தப் பாலை வனத்தின் நடுவில் ஒரு அதிசயம்" என்றேன்.

"இதுதான் பாலைவனச் சோலை" என்றான் பையன்.

பிரயாணிகள் எல்லோரும் அந்தச் சோலையில் இறங்கிக் கண்ட கண்ட இடங்களில் கூடாரம் அடித்துக் கொண்டார்கள்.

நான் ஒட்டகத்தை விட்டு இறங்கியவுடன் அந்தப் பாலைவனச் சோலையைச் சுற்றி வந்தேன். பேரிச்ச மரங்கள் நிறைந்த தோப்புகள். நடுவில் நீர் ஊற்று. சுற்றுப் பக்கங்களில் வீடு வாசல்கள் நிறைந்திருந்தன. பார்வைக்கு ஒரு சிறிய கிராமத்தை ஒத்திருந்தது. ஷேக்தாவுது இருந்த கூடாரத்திற்குத் திரும்பி வந்தேன். பிரயாணிகள் எல்லோரும் அந்த நீர் ஊற்றில் குளித்துக் கொண்டிருந்தார்கள். நானும் குளித்தேன். பிறகு ஷேக்தாவுதோடும், அவனுடைய பெற்றோர்களோடும் சேர்ந்து சாப்பிட்டேன். பேரிச்ச மரத்து நிழலில் பிரயாணிகள் ஜமக்காளங்களை விரித்துக் கொண்டு, பாட்டுப் பாடுவதும், மேளக் அடிப்பதும் சீட்டு ஆடுவதுமாக சந்தோஷமாகக் காலங் கழித்தார்கள்.

அவ்விடத்தில் மூன்று நாள் தங்கி இருந்தோம். நான்காவது நாள் மறுபடியும் பிரயாணத்திற்கு ஆரம்பித்தோம். நானும் ஷேக்தாவுதும் ஒரு ஒட்டகத்தின் மேலே ஏறிக்கொண்டு பிரயாணம் செய்தோம். இந்தப் பிரயாணத்தில் நானும், பிரயாணிகளும் மிகுந்த கஷ்டப்பட்டோம். ஏனென்றால், பாலை வனத்தில் மணற் காற்று ரொம்பவும் கொடூரமாக அடித்தது. கண்களிலும், மூக்குகளிலும் மணலை பலமாக வீசி அடித்தது. அதைக் கூடிய வரையில் சமாளித்துக் கொண்டு முகத்தை மூடிக் கொண்டே சுமார் நாற்பதுமுப்பது மைல் பிரயாணம் செய்த பிறகு மற்றொரு பாலைவனச் சோலையை அடைந்தோம். அதைச் சுற்றிலும் கிராமங்கள் இருந்தன. அதிலும் கூடாரம் அடித்துக் கொண்டு பிரயாணிகள் முன்போலவே சந்தோஷமாகக் காலங் கழித்தார்கள். மாலை நேரங்களில் பிரயாணிகள் கிராமத்தார்களிடம் வியாபாரம் செய்தார்கள். அவ்விடத்தில் ஆறு நாள் தங்கி இருந்தோம். மறுபடியும் பிரயாணத்திற்கு ஆரம்பித்தோம்.

"தம்பி! உன்னை ஒரு விஷயம் அல்லவா கேட்க்கவேண்டும் என்று நினைத்தேன்" என்றேன்.

"என்ன?" என்றான் பையன்.

"நீங்கள் எல்லோரும் தூய வெள்ளை கால் சட்டைகளையும், சட்டைகளையும் அணிந்து கொண்டிருக்கிறீர்களே, அது ஏன்? எங்கள்

ஊர் முஸ்லிம்கள் எல்லாம் அதிகமாக வர்ண உடைகளைத் தானே அணி கிறார்கள்" என்றேன்.

"ஓகோ, அதுவா! இந்தப் பாலைவன வெய்யிலைத் தாங்கக்கூடியது தூயவெள்ளை வஸ்திரம்தான். வர்ண உடைகளை அணிய முடியாது" என்றான் பையன்.

"தெரிந்தது இப்பொழுது" என்றேன்.

பிறகு இரண்டு மூன்று பாலைவனச் சோலைகளைக் கடந்த பிறகு, கடைசியில் ஒரு கடற்கரைப் பட்டணத்தை அடைந்தோம். பிரயாணி கள் எல்லோரும் ஒரு தோப்பில் கூடாரம் அடித்துக் கொண்டார்கள்.

நானும் விமானியும் பிரயாணிகளிடம், "போய் வருகிறோம்" என்று விடை பெற்றுக்கொண்டு துறைமுகத்தை நோக்கி நடந்தோம். கடல் கண்ணுக்குத் தெரிந்தது. "இந்தக் கடலுக்கு என்ன பெயர்?" என்று விமானியைக் கேட்டேன்.

"இதுதான் மத்தியதரைக் கடல்" என்றார் விமானி.

"அப்பாடா! இதுதானா அது" என்றேன்.

புதிய நூல்!

திரு அருள் மொழி

மூவர் தேவாரம், திருவாசகம், நாலாயிரப் பிரபந்தம்— இவைகளிலிருந்து தெரிந்தெடுக்கப்பட்ட 500 பாசுரங்கள் அடங்கியது.

முதற் பாகத்தில் விரிவான பக்திசாரமும், இரண்டாம் பாகத்தில் பாசுரங்களும் அவைகட்கு உரையும் விளக்கக் குறிப்புகளும், மூன்றாம் பாகத்தில் அப் பாடல்களிலிருந்து திரட்டிய சிவ விஷ்ணு ஸஹஸ்ரநாம அகவல்களும் உள்ளன.

பக்கங்கள் : 600

விலை சாதா ரூ. 2—14—0

,, காலிகோ ரூ. 3—12—0

தபாற் கட்டணம் :	சாதா	காலிகோ
புக் போஸ்டு	அணா 5	அணா 6
ரிஜிஸ்டெர்ட்	,, 8	,, 9

விரிவான ஜாபிதாவுக்கு எழுதுக

ஸ்ரீ ராமகிருஷ்ண மடம், மயிலாப்பூர், சென்னை

சரித்திர பாட போதனை

M. K. சிவராமன், தலைமை ஆசிரியர்,
[போர்டு ஹையர் எலிமெண்டரி பாடசாலை, பாமிரெட்டிபட்டி]

நோக்கங்கள் :—சரித்திரம் போதிப்பதனால் மாணவர்களுடைய தேசாபிமானம் விருத்தி அடைவதுடன் முற்கால சரித்திர சம்பவங்களைத் தம் மனக்கண்ணால் பார்த்தறிவதால் கற்பனா சக்தியும், முற்கால சரித்திர சம்பவங்களையும் அவற்றிற்குக் காரணமாயுள்ள சரித்திர சம்பவங்களையும் அறிதலால், ஞாபக சக்தியும், இவ்விரு சம்பவங்களையும் சீர்தூக்கிப் பார்த்து காரண காரியங்களை (Cause and effect) அறிவதால் தர்கிக்கும் சக்தியும் அபிவிருத்தி அடைகிறது.

சரித்திரம் கற்றுக் கொள்ளுவதினால் மாணவர்கள் தற்காலம் உலகத்தில் நடக்கும் விஷயங்களுக்கும் ஒருவித சம்பந்தம் இருப்பதை அறிகின்றனர். ஒரு மாணவன் தற்கால சம்பவங்களுக்குக் காரணமாயுள்ளது முற்கால சரித்திர சம்பவம் என்பதைத் தெரிந்துகொள்ள சரித்திரம் உதவுகிறது. இதன் மூலம் மாணவன் சரித்திர உணர்ச்சி (Historic sense) சாஸ்திரீயப் பழக்கம் முதலியவற்றை அடைகிறான். அவன் ஆராயாமல் எந்த விதமான விஷயங்களையும் ஒத்துக் கொள்வதில்லை. சரித்திரத்தில் காணப்படும் விஷயங்களுக்கும் சரித்திரத்தின் மூலம் வீரர், பெரியோர் முதலியோர்களைப் போற்றவும் பழக்கம் ஏற்படுகிறது. மாணவர்கள் வீரர்களைப் பற்றிப் படிக்கும் பொழுது வயது வந்தவுடன் தாங்களும் வீரர்களாகத் திகழ வேண்டுமென்ற உணர்ச்சி அடையக்கூடும். இதன் மூலம் தன்னலமின்மையும், பொறுமையும், சகிப்புத் தன்மையும் வீரம் முதலியனவும் ஏற்படலாம். நம்முடைய தேசத்திற்காகப் பாடுபட்ட பல தியாகிகளின் சரித்திரத்தைப் படிப்பதால் தேசாபிமானம் விருத்தியடைவதுடன் தம்மாலானவரை தேசத்திற்கு உதவி செய்ய முற்படுவார்கள்.

சரித்திர சம்பந்தமான விஷயங்களைப் பொறுக்குதல் : ஆரம்ப நிலையில் நாம் பொறுக்வேண்டிய விபரங்கள் சுலபமாகவும் தகுந்த அளவாகவும் திருஷ்டாந்தங்களுடன் கூடியதாகவும் இருத்தல் வேண்டும். குழந்தை சுற்றுப் புறத்தில் தினசரி பார்த்தும் கேட்டும் படிக்கும் படியானவையுமான பெரியார்கள், சம்பவங்கள், பிரசித்தி பெற்ற இடங்கள் இவைகளைப் பற்றிய சுலபமான விஷயங்களாக இருத்தல் நலம்.

பொறுக்கும் விஷயங்கள் அந்நிலைக்கேற்றவாறும் தகுந்த அளவாகவும் ஒரு குறித்த சம்பவத்தை விளக்கக் கூடியதாகவும் இருத்தல் வேண்டும். வீரர்களின் செயல்களைப் பற்றி அதிகம் அறிய விரும்புவார்

களே யல்லாது அவர்களின் அபிப்பிராயம், தத்துவம் இவைகளைப்பற்றி அறிய விரும்ப மாட்டார்கள். ஆதலால் வீரர்களின் செயல்களைப் பற்றியும் அவர்களுடைய குணாதிசயங்கள் தீரச் செயல்களைப் பற்றியும் திறம்பட போதித்தல் அவசியமாகும்.

ஆரம்ப வகுப்புகளில் போதிக்கப்படும் சம்பவங்கள், படங்கள், செய்யுட்கள் முதலியவற்றின் மூலமாய் இருக்க வேண்டும். அதாவது அவர்களுடைய கவனத்தை இழுக்கக் கூடியனவும், தங்கள் மனதில் இருத்தக் கூடியனவும் உணர்ச்சியை ஊக்குவதாகவும் இருத்தல் வேண்டும். அவர்களுடைய உணர்ச்சிகளையும் மூளை வளர்ச்சியையும் ஒருமிக்க விருத்தி செய்யக்கூடியதா யிருத்தல் நலம். சுய சரிதைகள் போதிப்பதிலும், கதைகள் சொல்வதிலும் முற்காலத்தில் வீரர்கள், பிரசித்தி பெற்ற மனிதர்கள் தேசாபிமானிகள் இவர்களைப் போல் தற்போதுள்ள மனிதர்களை மதிக்கவும் அவர்களை பின் பற்றவும் தேவையான அளவு உணர்ச்சியுண்டாக்க வேண்டும்.

தற்காலத்திலுள்ள தேசாபிமானிகள், பெரியார்கள் இவர்களின் சுய சரிதைகளும் சரித்திரமாக அமையலாம். ஆனல் அவர்கள் செய்த நற்காரியங்கள் அவர்களடைந்த நலன்கள் குணாதிசயங்கள் முதலியவற்றைப் பற்றி போதித்தல் வேண்டும். நம்முடைய தேசத்திற்கு நலன்களைச் செய்த பெரியார்களின் சுய சரிதைகள் குணாதிசயங்கள் முதலியனவும் நம் சரித்திர பாடத்தில் ஒரு முக்கியமான அம்சமாக இருத்தல் வேண்டும்.

விவரங்களைத் தொகுத்தல் :-முதலாவதாக விவரங்கள் தனிப்பட்ட முறையில் இல்லை. அவை சம்பந்த முள்ளவைகளாகவும் ஒவ்வொரு சரித்திர சம்பவமும், காரணமும் காரியமுமாகவும் இருப்பதால் அவைகளை அவற்றின் சம்பந்தங்களுக்கு ஏற்றவாறு விளக்க முடியுமேயல்லாது வேறு விதங்களில் அவற்றை விளக்க இயலாது. இரண்டாவதாக விவரங்கள் முந்திய சரித்திர விவரங்களுடனாவது ஒரே மாதிரியான விவரங்களுடனாவது மனதில் இருத்தப்பட்ட விவரங்களுடனாவது சம்பந்தப்படுத்தியே போதிக்கவேண்டும். அறிவைப் பெற விவரங்களை சம்பந்தப்படுத்தலும், தொகுத்தலும் மிகவும் அத்தியாவசியமாகிறது. கற்றவற்றை மனதில் இருத்த விவரங்களைத் தொகுத்தலும் சம்பந்தப் படுத்தலும் முக்கியம். அவ்வாறில்லையெனில் சம்பந்த மற்ற விவரங்களை ஞாபகத்தில் வைத்திருத்தல் முடியாது.

விவரங்களை தொகுத்தலில் (1) காலம் (2) பூகோளம் (3) காரண காரியம் ஆகிய இவைகளை கவனித்தல் அவசியம்.

சரித்திரம் என்பது செயல்களேயன்றி வேறல்ல. இச் செயல்கள் காலம் இடம் இவைகளை அடிப்படையாக உடையன. காலம் (chronology) இடம் (Geography) இவையிரண்டும் சரித்திர பாடத்

தின் இரு கண்களாகும். ஆகையால் ஒரு ஆசிரியர் காலஉணர்ச்சி, இடத்தின் தன்மை இரண்டிற்கும் சரித்திர பாடத்தில் முக்கியத்வம் அளித்தல் வேண்டும்.

பாட விஷயம்:—முதல் மூன்று வகுப்புக்களுக்கு கற்பிக்கப்படும் சரித்திரம் கதைகளாகவும் ஒன்றுக் கொன்று சம்பந்த மில்லாமலும் காலம் குறிக்கப்படாமலும் இருக்கும். ஆனால் 4, 5, வகுப்புகளில் போதிக்கப்படும் சரித்திரம் மனதில் நிலைத்திருப்பனவும் குறித்தகாலம் உடையனவாயும் இருத்தல் வேண்டும். ஆரம்ப நிலையில் சரித்திர சம்பந்தமான கதைகளைப் பொறுக்குவதில் ஒரு நியமனம் இல்லை. ஆனால் அதை மாணவர்களின் மனேநிலை, இடம் முதலியவற்றிற்கு ஏற்றவையாக இருக்கும்படி அமைத்துக் கொள்ளுதல் வேண்டும்.

ஆரம்பநிலையில் சரித்திர போதனை:—இந்நிலையில் சம்பாஷணை மிகவும் முக்கியமானது. அதனல் சம்பாஷணையுடனும் படங்களுடனும் கூடிய திருஷ்டாந்தங்களுடன் சரித்திர சம்பவங்களை கதைகளின் மூலம் போதிக்கவேண்டும். உபாத்தியாயர் கதை சொல்வதில் தகுந்த தேர்ச்சியுடையவராக இருத்தல்வேண்டும். அவைகளை மாணவர்களின் உணர்ச்சிகளை ஊக்கும் படியும் அவர்கள் ரசிக்கும்படியும் சொல்லுதல் வேண்டும். புத்தகங்களிலிருந்து படித்தல் கூடாது. ஆசிரியர் கதா பாத்திரங்களின் உணர்ச்சியை அடைவதுமன்றி தன்னையே கதாபாத்திரமாக நினைத்துக் கொள்ளுதல் வேண்டும். போதிக்கப்படும் பாடங்கள் சிறியவையாகவும் மாணவர்களின் செயல்களுக்குத் தகுந்த அளவு அவகாசமும் கண்ணைக் கவரக்கூடிய பலவிதங்கள் மூலமும் இச்சரித்திரபாடம் கற்பிக்கப் படவேண்டும். மாணவர்கள் கோர்வையாக முழுக்கதையையும் தங்கள் சுயபாஷையில் சொல்லும்படி செய்யவேண்டும். கேள்விகள் மூலம் விடையளிக்கும் முறையினல் சரித்திர பாடம் உயிரற்றுப் போவதால் இம்முறை தவிர்க்கப் படுதல் வேண்டும். பிரசங்கமுறையின் மூலம்தான் சரித்திரம் போதிக்கமுடியும். ஏனெனில் கற்றுக்கொள்ளவேண்டிய விஷயங்கள் முற்றிலும் புதியது. பிரசங்கமுறையில் திருஷ்டாந்தங்களுக்கு அதிக இடம் அளித்தல் வேண்டும். வீரர்கள், சரித்திர சம்பவங்கள், சண்டைகள், பட்டாபிஷேகம் முதலியவையும், பிரவித்திபெற்ற கோட்டைகள், கட்டிடங்கள் முதலியவற்றைக்காட்டும் படங்களும் உபயோகிக்கப்பட வேண்டும். இதுவன்றி அநேக வகைகளாலும் சரித்திர பாடத்தை ஒருநிதர்சன பாடமாக மாற்றலாம்.

1. மாணவர்களை சரித்திரத்தில் பிரவித்திபெற்ற பல இடங்களுக்கு (அவ்விடத்திற்கு ஏற்றவாறு) சௌகரியமாக அழைத்துச் செல்லுதல் வேண்டும்.

2. சரித்திர சம்பந்தமான காட்சிகள், படங்கள், சரித்திரத்தில் தோன்றும் பெரியார்களின் படங்கள் முதலியன காட்டப்படவேண்டும்.

3. சம்பாஷணையும் நடிப்பும் கொண்ட நாடகங்கள் நடித்தல்.

4. சரித்திரத்திலுள்ள வஸ்துக்கள், காட்சிகள் முதலியவை களின் மாதிரிகள் செய்து வைத்தல். (உ-ம்) வீடுகள், ஆயுதங்கள் பூர்வீக மனிதர்கள், சண்டைகள், கோயில்கள் முதலியன.

5. சரித்திர வஸ்துக்களைக் காகிதம் அட்டை முதலியவற்றால் கத்தரித்து வைத்தல்.

6. முற்காலத்தவர்களின் ஆயுதங்கள், உடை, கட்டிடம், நாண யங்கள் முதலியவற்றின் படம் வரைந்து வைத்தல்.

7. படங்களுடன் கூடிய காலக்கோடுகள்.

8. சாதாரண சரித்திர சம்பவங்களைக்காட்டப் படம் வரைதலும் நிலப்படம் வரைதலும்.

ஆரம்பவகுப்புகளில் சரித்திர போதனையில் தேதிகளை விடுத்து நூற்றாண்டு காலக்கோட்டின் மூலம் கால அறிவை மாணவர்களுக்கு சரி வர உண்டாக்குதல் வேண்டும் 5 வது வகுப்பில் சில முக்கியமான தேதிகளை கொடுத்தல் நலம். இத்தேதிகள் அச்சரித்திர சம்பவங்களு டன் இணைத்தே போதிக்க வேண்டுமேயல்லாது தனியாக போதிப்ப தால் அவைகளை மாணவர்கள் மறந்து விடுவார்கள். ஆரம்ப வகுப்பு களில் சரித்திர போதனைக்கு புத்தகங்கள் அவசியமில்லை. நல்ல சரித்திர புத்தகங்களாகவும் மாணவர்களின் மனோநிலைக்கு ஏற்றவாறுமிருந்தால் 5-வது வகுப்பில் புத்தகம் உபயோகிக்கலாம்.

குறிப்பு :—நீதிக்கதைகள், வீரம் ததும்பும் கதை, பெருந்தன்மை, தன்மதிப்பு தேசாபிமானம் முதலியவற்றைக் கற்பிக்கும் கதைகளுக்கு முதன்மைஸ்தானம் கொடுப்பதுமன்றி கொலை, கொடுமை நிறைந்த கதைகளை போதிப்பதில் ஆசிரியர் தகுந்த கவனத்துடன் அவ்வுணர்ச்சியை மாணவர்களிடம் ஊட்டாமல் கருணை, தயை முதலியன ஏற்படும்படி கதைகளை கூறுதல் வேண்டும்.

அனுபவ வேலைகளும் பயிற்சியும் :—முயற்சியோடு கற்ற அறிவு தான் மனதில் நிலைத்து நிற்கும். உபாத்தியாயர் கற்றுக் கொடுத்தவை களை மாணவர்கள் தங்கள் மனதில் பதிய வைத்துக் கொள்ளுதல் வேண் டும். விஷயங்களை ஆராய்ந்து அறியவேண்டியது மாணவர்களின் கடமை யாகும். இங்ஙனம் அவர்கள் பெற்ற அறிவை அவர்கள் நன்றாக கிர கித்து அதை எவ்விதத்திலாயினும் வெளிப்படுத்த வேண்டும். அப்படி வெளிப்படுத்தவும் சந்தர்ப்பம் அளித்தல் அவசியம். ஆதலால் மாண வர்களின் வேலை இருவகைப்படும்.

(1) போதிய அறிவைப் பெறுதல் அல்லது அடைதல் (2) முன்பு பெற்ற அறிவை ஸ்திரப்படுத்தலும் அவற்றை வெளிப்படுத்தலும்.

மாணவர்கள் புத்தகங்களைப் படித்தலின் மூலம் அறிவை பெறு கின்றனர்; பரீக்ஷைகளின் மூலம் அவர்கள் தாம் பெற்ற அறிவை வெளி யிட்டு அவைகளை ஸ்திரப்படுத்திக் கொள்ளுகின்றனர். ஆரம்ப நிலையில்

இம் மாதிரியான முறையைக் கையாளுதல் முடியாது. இந் நிலைச்குறிய புத்தகங்கள் கிடைப்பதரிது. அங்ஙனம் கிடைத்தாலும் போதிய அளவினதாகவும் நிலைக்கு ஏற்றதாகவும் இராது. மேலும் இந்நிலையில் பரீக்ஷைகளின் மூலம் மாணவர்களின் அறிவை அறிதலும் கடினம். ஆதலால் உபாத்தியாயர் வாய் மொழியாகவே அதாவது சிறு கதைகளின் மூலமேதான் சரித்திர சம்பவங்களை மாணவர்களுக்குக் கொடுப்பதுடன் அவ்வப்பொழுது வாய்மொழியாகவே கேள்விகள் கேட்டு பதில் அளிக்கும்படி செய்து அவர்கள் கற்றுக்கொண்ட விஷயங்களை ஸ்திரப்படும்படி செய்யவேண்டும்.

பயிற்சி ஆரம்ப நிலை: ஆரம்ப நிலையில் அடியிற் கண்ட பயிற்சிகள் மாணவர்களுக்குக் கொடுக்கப்படல் வேண்டும்.

(1) சரித்திர சம்பந்தமான ஆயுதங்கள், உடைகள், சாமான்கள், தினசரி வாழ்க்கையில் ஏற்பட்ட சம்பவங்கள் இவைகளின் படங்களைப் பார்த்தெழுதக் கற்றல்.

(2) ஆயுதங்கள், பாத்திரங்கள், கோயில்கள் முதலியவற்றின் களிமண் மாதிரி செய்யும்படி சொல்லல்.

(3) அட்டைகளில் கோட்டைகள், கோயில்கள், அரண்மனைகள் இவற்றின் மாதிரிகள் செய்தல்.

(4) மாதிரிகள் உண்டாக்குதல், படங்கள் எழுதுதல், காகிதம் வெட்டுதல் முதலியன.

(5) சரித்திர சம்பவங்களை நடித்தல்.

மாணவர்களுக்கென்று தனியாக ஆசிரியரால் எழுதப்பட்ட நாடகமாவது அல்லது வேறு நாடகத்திற்குரிய கதைப் புத்தகத்தைக் கொண்டாவது உள்ளவைகளை தெரிந்தெடுத்து நடிக்கச் செய்தல். ஆங்கிலமாக இருந்தால் அதை ஆசிரியர் தாய் மொழியில் மொழி பெயர்த்துக் கொண்டு உபயோகிக்கலாம். இவற்றின் மூலம் சரித்திரத்தின் உண்மைத் தன்மை மாணவர்களுக்குச் செவ்வனே விளங்குகிறது. இவைகளுடன் மாணவர்களுக்குப் போதிய அளவு கைத்தொழில் வேலையும் சித்திரம் வரையும் வேலையும் அளிப்பதால் இதன் முக்கியத்வம் அதிகரிக்கிறது. வருஷத்தில் ஒன்று அல்லது இரண்டு முறை குறித்த ஒரு சரித்திர சம்பவத்தை நடிக்கச் செய்யலாம்.

(6) ஐந்தாவது வகுப்பில் சுலபமான காலக் கோடுகள் வரைதல், விவரங்களை வரிசைப்படி எழுதிக் காட்டல், முதலிய பயிற்சிகள் அளிக்கலாம்.

(7) தமிழ் பண்டிதர்களின் உதவிபெற்று சுலபமான சரித்திரப் பாட்டுகளை அமைத்துக் கொடுக்கும்படி செய்து அவைகளை மாணவர்கள் எழுதி மனப்பாடம் செய்யுமாறு செய்யலாம்.

செய்தித் திரட்டு

அக்பராபாட் ஸ்கூல், கோடம்பாக்கம்

25—11—43-ல், மிஸ்டர் ரஹீம்பேக் தலைமையில் பாஷா அபி விருத்தி சங்கம் கூடிற்று. மாணவ மாணவிகள் ஓர் கதம்பக் கச்சேரி நடத்தினர்கள். பறங்கிமலை உல்லாசப் பிரயாண வியாசப் போட்டியில் தேர்ந்தவர்களுக்கு இப்பாடசாலைப் போஷகர் மிஸ்டர் அக்பர்பாஷா சாஹேப் பகதூர் பரிசுகள் வழங்கினர்.

ஆசிரியர் சங்கம், அவளூர்பேட்டை

13—11—43-ல், ஜில்லா கல்வி அதிகாரி ஸ்ரீ கிருஷ்ணசாமி அய்யங்கார் தலைமையில் கூடிற்று. பெண் கல்வி என்பதுபற்றி எட்டாவது வகுப்பு மாணவி, கனகம் சொற்பொழிவு செய்தாள். மாணவர்கள் யுத்தப் பாடல்கள் பாடினர். தலைவர் 'தென்னூற்காடு ஜில்லாவும் ஆசிரியர் கடமையும்' என்பதுபற்றி விவரமாய்ப் பேசினர்.

ஆரம்ப ஆசிரியர் சங்கம், வாணியம்பாடி

13—11—43-ல், மிஷன் பாடசாலை ஆசிரியர் ஸ்ரீ ஜேசுதாஸன் தலைமையில் கூடிற்று. ஜனப் பகீர் அஹ்மத் 5-ம் வகுப்பிற்கு சென்னை ராஜதானி பூகோளம் கற்பித்துக் காட்டினர். ஜனப் அப்துல் வஹாப் சாஹேப் ஆரம்ப பாடசாலையில் பிராஜெக்ட் மெதட் (**Project method in the Elementary Schools**) என்பதுபற்றி வியாசம் படித்தார். இதைப்பின்பற்றி மிஷன் பாடசாலை ஆசிரியர் ஸ்ரீ சுப்ரமணிய அய்யரும், ஸ்ரீ ராமசாமி ஐயங்காரும் பேசினர்கள்.

இந்துமத பாடசாலை, வாலாஜாபாத்

26—11—43-ல், செங்கற்பட்டு சப் கலெக்டர், தேசீயப் போர் முன்னணியமைப்பாளர், விரிவுரையாளர்களுமாக சுமார் 60 பேர்கள் ஆடவரும் பெண்டிரும் வருகை புரிந்து, பாடசாலையின் பலபாகங்களையும் பார்வையிட்டு, மாணவர்களின் விளையாட்டுகளைக் கண்டுகளித்தும் அவர்களைப் பாராட்டியும் சென்றனர்.

போர்டு உயர்தர ஆரம்ப பாடசாலை, கொங்கணபுரம்

24—11—43 முதல் 30—11—43 வரை சுகாதார வாரம் கொண்டாடப்பட்டது. ஸ்ரீ நஞ்சப்ப அய்யர் தலைமை வகித்தார். தலைமை ஆசிரியர் ஸ்ரீ பாலுசுவாமி நாயுடு மாணவர்களைக்கொண்டு ஊர்வலம், விளையாட்டுகள், பரிசு வழங்குதல், முதலியன நடத்தினர்.

ஆரம்ப ஆசிரியர் சங்கம், தலைவாசல், ஆரகளூர்

29, 30—11—43-ல், சுகாதாரவாரம் கொண்டாடப்பட்டது. மாணவ மாணவிகளைக்கொண்டு ஊர்வலம், பந்தய விளையாட்டுகள், கும்மி

முதலியன நடைபெற்றன. கிராமச் சங்கத்தலைவர் அண்ணாமலை மூப்பர் தலைமையில் பொதுக்கூட்டம் நடைபெற்றது. தலைமை ஆசிரியர் ஸ்ரீ ராமச்சந்திர அய்யர் சுகாதார விஷயமாய்ப் பேசினார்.

ஆரம்ப ஆசிரியர் சங்கம், மங்கநல்லூர்

13—11—43-ல், பத்தாம் ஆண்டு நிறைவுவிழா திரு. கலியாணசுந்தரம் பிள்ளை தலைமையில் கொண்டாடப்பட்டது. அப்பொழுது முனிசிபல் ஹைஸ்கூல் தலைமை ஆசிரியர் ஸ்ரீ ராகவ அய்யங்கார் 'ஆரம்பக்கல்வியும் ஆசிரியர் கடமையும்' என்பதுபற்றி சொற்பொழிவு செய்தார். தலைவர் இதை விமர்சனம் செய்து புகழ்ந்து பேசினார். இனிய தேனீர் விருந்துடன் கூட்டம் கலைந்தது.

பஞ்சாயத்து போர்டு பாடசாலை, பழமார்நேரி

21—11—43-ல், ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதி ஸ்ரீ ஜகத்குரு ஸ்ரீ சங்கராசார்ய சுவாமிகள் பக்தகோடிகளுடன் எழுந்தருளினார்கள். பஞ்சாயத்து போர்டு பிரசிடெண்டு அவர்களால் மாலை சூட்டப்பட்டு வரவேற்கப்பட்டார். ஜூனியர் டிப்டி இன்ஸ்பெக்டர் ஸ்ரீ உமாகாந்தம் வந்திருந்தார். பள்ளிக்கூட மாணவிகள் கும்மி, கோலாட்டம் போட்டும் பிறகு மாணவ மாணவிகள் சேர்ந்து 'குசேலோபாக்யானம்' என்னும் நாடகத்தைத் திறம்பட நடித்துக்காட்டியும் வந்திருந்த எல்லாரையும் மகிழ்வித்தனர். ஸ்ரீலஸ்ரீ ஆசார்ய ஸ்வாமிகள் பக்தி மார்க்கத்தைப் பற்றி உபந்நியசித்து உபாத்தியாயர்களுக்கும் மாணவ மாணவிகளுக்கும் ஆசி கூறினார்.

போர்டு உயர்தர ஆண்பாடசாலை, புதுப்பேட்டை (பண்ருட்டி)

2—12—43-ல், பெற்றோர், மாணவர் சங்கங்களின் வருஷாந்திர விழா ஜில்லா கல்வி அதிகாரி ஸ்ரீ கிருஷ்ணசாமி அய்யங்கார் தலைமையில் கொண்டாடப்பட்டது. மாணவர்கள் 'ஹிட்லரின் சரணாகதி' என்ற நாடகத்தைத் திறமையாய் நடித்துக் காட்டினர்.

சோமசுந்தர வித்யாசாலை, நேமத்தான்பட்டி

3—12—43-ல், 4, 5 வகுப்பு மாணவர்கள் கால்நடையாக உல்லாசப் பிரயாணம் சென்று, கனகப்பநேந்தலில் புதுமுறை தண்ணீர் இறைக்கும் இயந்திரத்தையும், கடியாபட்டியில் மீனாட்சி நெசவுத்தொழிற்சாலையையும், ராயவரத்தில் காகிதம் செய்யும் கிராமக் கைத்தொழிற்சாலையையும், லெட்சுமிபுரத்தில் பாடசாலை மியூசியத்தையும் பார்வையிட்டு வந்தனர்.

போர்டு ஆரம்ப பாடசாலை, மரக்கடை

1—12—43-ல், கிராமச் சீரமைப்பு வாரவிழா பூர்த்தி, நீடாமங்கலம் சப் மாஜிஸ்டிரேட் ஜனப் அப்துல் ரஜாக் தலைமையில் கொண்டாடப்

பட்டது. பல பிரமுகர்கள் வந்திருந்தனர். கூத்தாநல்லூர் சப் ரிஜிஸ்தரார் ஸ்ரீ வெங்கட்டரமணி 'சிக்கனம்' என்பதுபற்றியும், தலைமை ஆசிரியர் ஸ்ரீ ராமகிருஷ்ணையர் 'உணவுப்பொருள்களை அபிவிருத்தி செய்தல்' என்பதுபற்றியும் உபந்நியசித்தார்கள். 'மரமா மழை கொடுக்கும்' என்னும் சம்பாஷணையும், 'நட்பின் பெருமை' என்னும் சிறு நாடகமும் மாணவர்களால் நடைபெற்றன.

டவுன் ஆரம்ப ஆசிரியர் சங்கம், தஞ்சை

27—11—43-ல், டிப்டி இன்ஸ்பெக்டர் ஸ்ரீ துரைசாமி முதலியார் தலைமையில் கூடிற்று. அவ்வமயம், டிப்டி இன்ஸ்பெக்டர் ஸ்ரீ கோபாலய்யர், 'கைத்தொழிற் பாடம் போதித்தல்,' 'நல்ல கல்லூரிக்குரிய நான்கு லக்ஷணங்கள்' என்பனபற்றிப் பேசினர். தலைவர் 'தற்கால கல்லூரியும் ஆசிரியர் கடமையும்' என்பதுபற்றிப் பேசினர். இச்சங்கத்தின் பெயரால் ரூபாய் பத்துக்கு யுத்த டிபென்ஸ் ஸேவிங் ஸர்டிபிகேட் வாங்கத் தீர்மானிக்கப்பட்டது. ஒரு அணு சேகரிப்பு தினம் கொண்டாடப்பட்டு ரூ. 33—6—0 வசூலித்து அனுப்பப்பட்டது

போர்டு ஹையர் எலிமெண்டரி பாடசாலை, அம்மாபேட்டை

26—11—43 முதல் 1—12—43 வரை கிராமச் சீரமைப்பு வாரம் கொண்டாடப்பட்டது. யூனியன் போர்டு தலைவர் ஸ்ரீ சேஷையாவைத் தலைமையாகக்கொண்டு நிறைவேற்றுக்கழகம் நிறுவப்பட்டு அங்கத்தினர்கள் ஒவ்வொருவரும் பங்கெடுத்துக்கொண்டு விழாவைச் சிறப்பித்தனர். மாணவ மாணவிகளால் கும்மி, மாறுவேடப்போட்டி, கல்வி, சுகாதாரம், குடிசைத் தொழில் முதலியனபற்றி சொற்பொழிவுகள் நடைபெற்றன. கடைசி தினம் ஸ்ரீ சாம்பமூர்த்தி சேண்டப்பிரியர் தலைமையில் போட்டிகளில் தேர்ச்சிபெற்ற மாணவ மாணவிகளுக்கு பரிசுகள் வழங்கப்பட்டன

போர்டு முகம்மதிய ஆரம்பக் கல்லூரி, திருப்பூந்துருத்தி

26—11—43 முதல் 30—11—43 வரை கிராமச் சீரமைப்பு விழா, திருவையாறு அரசர் கல்லூரி பிரின்ஸ்பால் ஸ்ரீ கிருஷ்ணமூர்த்தி சர்மா தலைமையில் கொண்டாடப்பட்டது. பல பிரமுகர்கள், கல்வி, சுகாதாரம், பயிர்த் தொழில், குடிசைத் தொழில் முதலியனபற்றி உபந்நியசித்தார்கள்.

ஆரம்ப ஆசிரியர் சங்கம், மல்லூர்

13—11—43-ல், ஒரு அணு வசூல் தினம், ஸ்ரீ அங்கண்ண நாயுடு தலைமையில் நடைபெற்றது. இச்சென்டரைச் சேர்ந்த பாடசாலைகளிலிருந்து ரூ. 22—4—0 வசூலிக்கப்பட்டு ஆர்கனைசருக்கு அனுப்பப்பட்டது.

24—11—43 முதல் 30—11—43 வரை சுகாதார வாரம் கொண்டாடப்பட்டது. சுகாதார வாரத்தின் நோக்கம், மாணவர்களின் சுத்தம், தொத்து வியாதிகளும் அவைகளைத் தடுக்கும் முறைகளும், தற்காப்பு விதிகளும் மாணவர்களின் கவனமும், ஆகாரம், தண்ணீர், காற்று என்பனபற்றிச் சொற்பொழிவுகள் நடைபெற்றன. கடைசிதினம் மாணவர்களால் 'அரவணை சுந்தரம்' என்ற நாடகம் நடிக்கப்பட்டது.

போர்டு பாடசாலை, புதுக்குடி

26—11—43 முதல் 30—11—43 வரை கிராமச் சீரமைப்புவிழா கொண்டாடப்பட்டது. கடைசி தினம் ஸ்ரீ கோவிந்தராய நாட்டார் தலைமையில், கூட்டுறவு, சிக்கனம், முதலியனபற்றி சொற்பொழிவுகள் நடைபெற்றன. போட்டிப் பந்தயங்களில் வெற்றிபெற்ற மாணவ மாணவிகளுக்குப் பரிசுகள் வழங்கப்பட்டன.

ஆரம்ப ஆசிரியர் சங்கம், நாகப்பட்டினம்

4—12—43-ல், சீனியர் டிப்டி இன்ஸ்பெக்டர் ஸ்ரீ மாதவ ராவ் தலைமையில் கூடிற்று. தலைவர் யுத்த நிதிக்கு ஆசிரியர்கள் உதவி செய்வதைப்பற்றி விளக்கிப் பேசினார். ஜூனியர் டிப்டி ஸ்ரீ கிருஷ்ணமூர்த்தி அய்யர் யுத்தச் செய்திகளைப்பற்றிச் சுருக்கமாய்க் கூறினார். மாணவ மாணவிகள் 'பத்மினி' என்ற நாடகத்தை நடித்துக் காண்பித்தனர்.

போர்டு பாடசாலை, ஆடுதுறை, (பெரம்பலூர் தாலூகா)

ஸ்ரீ K. S. ஸ்ரீனிவாசன் தலைமையில் பெற்றோர் சங்கம் நடைபெற்றது. பாரதிப் பாட்டுப் போட்டி, நூல் நூற்பதில் போட்டி, சொற்பொழிவுகள் முதலியன நடைபெற்றன. தேர்ச்சி பெற்றவர்களுக்குப் பரிசுகள் வழங்கப்பட்டன.

போர்டு ஆண்பாடசாலை, மகராஜபுரம்

8—12—43-ல், கிராமச் சீரமைப்பு விழா, திருக்காட்டுப்பள்ளி ஹைஸ்கூல் ரிடயர்டு ஹெட்மாஸ்டர் ஸ்ரீ கல்யாண ராம அய்யர் தலைமையில் கொண்டாடப்பட்டது. மாணவிகள் கும்மி கோலாட்டம் போட்டனர். வித்வான் சபாபதி பிள்ளை 'கல்வி' என்பதுபற்றியும், தலைவர் 'நம் நாட்டுக் கிராமங்களின் நிலைமையும் தொழிற் கல்வியும்' என்பது பற்றியும் சொற்பொழிவு செய்தார்கள். பின்பு ஆசிரியர் ஸ்ரீ நாகராஜன் நன்றி கூற கூட்டம் இனிது கலைந்தது.

போர்டு பாடசாலை, முன்னீர்ப்பள்ளம்

7—12—43-ல், இளஞ் செஞ்சிலுவைச் சங்கம், கோயமுத்தூர் விவசாய கலாசாலை ஆசிரியர் ஸ்ரீ பூரணலிங்கம் பிள்ளை தலைமையில் கூடிற்று. தலைமை ஆசிரியர் ஸ்ரீராமகிருஷ்ண அய்யர் எல்லாரையும்

வரவேற்று இச்சங்கத்தின் சேவையைப்பற்றிச் சுருக்கமாய்க் கூறினர். தலைவர் 'மாணவர்களும் போட்டியும்' என்பதுபற்றி சிற்றுரை செய்தார். வியாசப்போட்டியில் வெற்றிபெற்ற ஸ்ரீ பூரணனுக்கு ரூ. 10 பரிசு அளிக்கப்பட்டது. தலைவர் முடிவுரையில் ஜூனியர் ரெட்கிராஸ் ஸ்தாபனத்தின் முயற்சிகளைப்பற்றி விரித்துக்கூறினர்.

சேலம் தாலூகா போர்டு ஆரம்பபாடசாலை ஆசிரியர் யூனியன்

11—12—'43-ல், கனனங்குரிச்சி போர்டு பாடசாலை தலைமை ஆசிரியர் ஸ்ரீ ராமஸ்வாமி அய்யங்கார் தலைமையில் கூடிற்று. தாலூகாவின் பல பாகங்களிலிருந்தும் ஆசிரியர்கள் வந்திருந்தனர். புதிய நிர்வாகஸ்தர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டபின் அரிசிமுதலிய உணவுப் பொருள்கள் பஞ்சப்படி டியூடி அலவன்ஸ் முதலியனபற்றித் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

ஆரம்ப ஆசிரியர் சங்கம் ஊஞ்சலூர் (ஈரோடு)

16—10—'43-ல் தாராபுரம் ஜூனியர் டிப்டி இன்ஸ்பெக்டர் ஸ்ரீ V. சற்குணம், B.A., L.T. அவர்கள் தலைமையில் கூடிற்று. 'நல்ல பாடசாலையின் லட்சணங்கள்' என்பது பற்றிப் பலர் பேசினர்கள். போர்டு பாடசாலை தலைமை ஆசிரியர் ஸ்ரீ ராதாகிருஷ்ணய்யர், 'தற்கால யுத்தமும் நமது கடமையும்' என்பது பற்றி விரிவாகப் பேசினர்.

ஸ்ரீ முருகன் பாம்

ஒவ்வொரு வீட்டிலும் அவசியம் இருக்கவேண்டிய குடும்பத் தோழன்!

கோடைக் கொப்பளம், சொறி, சிரங்கு, கரப்பான், வெட்டுக்காயம், சேத்துப்புண், பரு முதலிய சர்ம வியாதிகளுக்கு, இன்ஜெக்ஷன், ஆபரேஷன் இல்லாமல் குணப்படுத்தும் கைகண்ட ஔஷதம். களிம்பு ரூபமாய் இருக்கும் இம்மருந்தை தேங்காய் எண்ணெயில் குழைத்து புண் உள்ள இடங்களில் நன்ருகத் தடவி ஒரு மணி ஊரவிட்டு சீக்காய் அல்லது சோப் போட்டு நன்ருக சுத்தம் செய்து வந்தால் ஒரு வாரத்திற்குள் ஆச்சரியகரமாக குணப்படுத்தி விடுகிறது நிச்சயம். சிறு குழந்தை முதல் வயோதிகர் வரை யாவரும் உபயோகிக்கலாம். (மேலுக்கு மட்டும் உபயோகப்படுத்தவும்.)

ஒரு அவுன்ஸ் விலை ரூ. 0—8—0 (தபாற் செலவு வேறு)

: மற்ற விவரங்களுக்கு கீழ்கண்ட விலாசத்திற்கு எழுதவும் :

S. NARAYANASWAMY, M. P. S. (India)

Chemist, No. 24, Parthasarathiswami Street, TRIPLICANE, MADRAS.

பத்திராதிபர் குறிப்புகள்

ஆரம்ப ஆசிரியர்களும் விலை உயர்வும்

போர்நடந்து வருவதால் பலருக்கு பல கஷ்டங்கள் ஏற்பட்டிருக்கின்றன. ஆயினும் பொதுவாக ஜனங்களிடையே அதிக பணம் உண்டாயிருக்கிறது என்று சொல்லப்படுகிறது. வியாபாரிகள், முன் கிடைத்த சாமான்கள் இல்லாவிட்டாலும் சண்டையினால் புதிய துறையில் வியாபாரம் செய்து நல்லலாபம் பெறுகின்றார்கள். சண்டையின் காரணமாக பல கட்டிடங்கள் கட்டப்படுகின்றன. கண்டிராக்டர்களுக்கும், கட்டிட வேலைசெய்பவர்களுக்கும் நல்ல வருமானம் கிடைக்கின்றது. வியாபார ஸ்தலங்களில் வேலைசெய்யும் சிப்பந்திகளுக்கும், துரைத்தன இலாகாக்களில் வேலை செய்யும் சிப்பந்திகளுக்கும் சம்பள உயர்வு உண்டாய்க்கொண்டிருக்கிறது. தவிர, பஞ்சப்படியும் ஒரு தாராளமனதுடன் கொடுக்கப்படுகிறது. வியாபாரஸ்தலங்களில் இருப்போருக்கு நல்ல போனஸும் இப்பொழுது அளிக்கப்படுகின்றது. எனவே, சண்டையினால் பல கஷ்டங்கள் மனிதருக்கேற்பட்டிருக்கும்பொழுதிலும், பெரும்பாலருக்கு வருமானம் அதிகப்பட்டிருப்பது, சண்டையினால் ஏற்படும் ஒரு நன்மையோ என்றும் கருதவேண்டியிருக்கிறது. ஆயினும், ஆற்றில் எவ்வளவு வெள்ளம் ஓடினபொழுதிலும் நாய் அதை நாவினால்தான் பருகவேண்டியிருக்கிறது. ஆரம்ப ஆசிரியர்களுக்கு வருமானம் அதிகப்படவில்லை. அவர்களுக்கும் பஞ்சப்படி கொடுக்க வேண்டுமென்றால், உடனே மொத்தச்செலவு எவ்வளவு ஆகும் என்று கணக்கிட்டு, 15 லக்ஷம் ஆகுமே என்று திடுக்கிட்டு, ஒன்றும் செய்யாமல் சும்மா இருந்துவிட நேரிடுகிறது. ஆசிரியர்களுக்கு, வாழ்க்கைக்கு வேண்டிய சரக்குகளை யாராவது நியாயவிலைக்கு வழங்குகிறார்களா? ஆசிரியர்களுக்குப் பஞ்சமில்லையா? சமாதான காலத்தில் ஆசிரியர்களின் சம்பளத்தை உயர்த்த பணமில்லை என்று சொல்லிவந்தார்கள். இப்பொழுதோ வருமான வரியினாலும் விற்பனைவரியினாலும் ஏராளமான வரும்படி கிடைக்கின்றது. தவிர இப்பொழுது புதிய செலவுகளுக்குத் திட்டம் போடும் பொழுது, அது எவ்வளவு என்றோ, அதற்கு எங்கிருந்து பணம் கிடைக்கும் என்றோ ஒருவரும் யோசனை செய்வதைக் காணோம். ஆனால் ஆசிரியர்களுக்காக அளிக்கப்படும் உதவியை சற்று அதிகப்படுத்த வேண்டுமென்றால் நமது துரைத்தனத்தார் மிகத் தயங்குகிறார்கள். சண்டைக் காலத்தில் இப்பிரச்னையை யோசிக்கமுடியாது என்றால், இக்காலத்தில், ஆசிரியர்களுக்குத் தாராளமான பஞ்சப்படியாவது கொடுத்து உதவிசெய்வது தர்மம் ஆகாதா? மற்றவர்களுக்கு ரூ. 8—0—0 பஞ்சப்படி அளிக்கப்பட்டிருக்கையில், ஆரம்ப ஆசிரியர்களுக்கு மாத்திரம் ரூ. 2—0—0 போதுமா என்பதை நமது துரைத்தனத்தார் சிந்தித்து தங்களுடைய சிப்பந்திகளுக்குக் கொடுப்பதுபோல் ஆரம்ப ஆசிரியர்களுக்கு பஞ்சப்படி கொடுக்கும்படிக் கேட்டுக் கொள்கிறோம். நமது டைரெக்டர் துரை ஸர் மெவரல் ஸ்டாதாம் அவர்களுக்கு ஆரம்ப ஆசிரியர்களின் நிலைநன்கு தெரிந்துள்ளதே. எனவே, அவரைத் தான் ஆரம்ப ஆசிரியர்கள் உதவிக்கு எதிர்பார்க்கவேண்டும். ஆசிரியர்கள்

கஷ்டத்தை துரைத்தனத்தாருக்கு எடுத்துக்காட்டி அவர்களுக்கு வேண்டிய உதவியை அவர் செய்வார் என்று நம்புகிறோம்.

எம். எஸ். சுந்தரேஸ்வர அய்யர்.

இம்மாதம் 9-ந் தேதி யன்று, ஸ்ரீமான் எம். எஸ். சுந்தரேஸ்வர அய்யர் காலமானார் என்பது நமது நேயர்கள் எல்லோருக்கும் ஆழ்ந்த வருத்தத்தை உண்டாக்கியது. ஸ்ரீமான் சுந்தரேஸ்வர அய்யர் கல்வி இலாகாவில், ஆசிரியராகவும், டெபுடி இன்ஸ்பெக்டராகவும், ட்ரெயினிங் ஸ்கூல் தலைமை ஆசிரியராகவும் இருந்துள்ளார். இவர் ஆரம்ப ஆசிரியர்களுக்குச் செய்துள்ள தொண்டு மகத்தானது என்றே சொல்லவேண்டும். ஆரம்ப ஆசிரியர்களின் நன்மையையே நாடியவர். அவர்களின் பால் இவருக்கு மிக அனுதாபம் உண்டு. ஆசிரியர்களை உற்சாகப்படுத்துவதிலும், அவர்களுக்கு தன்னாலியன்ற சௌகர்யங்களைச் செய்து கொடுப்பதிலும் மிக ஊக்கம் கொண்டுள்ளார். நமது பாலர் கல்விக்கு இவர் மிகப் பேருதவி செய்துள்ளார். இதை ஆரம்பித்ததற்கு இவர் தூண்டுதலே ஒரு முக்கிய காரணமாகும்.

தவிர, ஆசிரியர்களிடம் கட்டுப்பாடும் ஒற்றுமையும் உண்டாக இவர் மிகப் பாடுபட்டார். கவர்ன்மெண்டிலுள்ள கீழ்தர உத்தியோகஸ்தர் சங்கத்தின் (Non gezetted officers' association) அங்கத்தினராகவும், காரியதரிசியாகவும் பல வருஷங்கள் இருந்துவந்தார். அச் சங்கத்தின் பரஸ்பரசகாய நிதி (Mutual Benefit Fund) யை ஏற்படுத்தியவர்களில் இவர் ஒருவர். பல வருஷங்கள் அதைத் தானே நடத்தி அதை இப்பொழுதிருக்கும் நல்ல நிலைக்குக் கொண்டுவந்து, பல உத்தியோகஸ்தர்களின் குடும்பங்களுக்கு நன்மை உண்டாக்கியவர் ஸ்ரீமான் சுந்தரேஸ்வர அய்யர் என்றால் மிகையாகாது. நமது தென்னிந்திய ஆசிரியர் சங்கக் காப்பு நிதி ஆரம்பிக்கப்படும் காலத்தில் இவர் மிகவும் உதவியாயிருந்தார்.

வர்தாவுக்குச் சென்று, வர்தா கல்வி திட்டத்திற்குரிய போதனை முறைப் பயிற்சி யடைந்து, மேட்டூரில் ஏற்படுத்திய போதனை சாலைக்குத் தலைவராக இருந்தது நேயர்களுக்கு ஞாபகம் இருக்கும். வர்தா கல்வி திட்டத்தை அமுலுக்குக் கொண்டு வராததினால், அப்போதனை சாலையை எடுத்துவிட்டார்கள்.

ஸ்ரீமான் சுந்தரேஸ்வர அய்யர் மிக உழைப்பாளி. தான் எடுத்த லக்ஷியத்தை நிறைவேற்ற அரும்பாடுபடக் கூடியவர். ஸர்விஸிலிருந்து பென்ஷன் வாங்கின பிறகும் கோயம்புத்தூருக்கு அருகில் ஒரு ஆரம்பப்பாடசாலையை ஸ்தாபித்து வர்தா திட்டத்தில் நடத்தி வந்தார். இவர் இறந்தது நம் நாட்டின் கல்வி யுலகுக்கே ஓர் பெரும் நஷ்டமாகும். ஆசிரியர்கள் ஒரு சிறந்த நண்பரை இழந்தனர்.

இவருக்கு 3 பெண்களும் இரு பிள்ளைகளும் இருக்கின்றார்கள். அவர்கட்கும், அவருடைய மனைவியாருக்கும், அவருடைய தம்பிகளுக்கும், வயது முதிர்ந்த தாயாருக்கும் எங்கள் மனமார்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

S. I. T. U. PROTECTION FUND, LTD., MADRAS

520, High Road, Triplicane, Madras.

நீங்கள்

இந்த நிதியில்

சேர்ந்து விட்டீர்களா?

தற்கால கையிருப்பு	...	...	ரூ. 2,47,115
பாலிஸிக்கள்	...	...	1,371
யூனிட்டுகள்	...	...	2,585

ஆக்சுவரியின் பரிசோதனையில்,
நல்ல லாபம் காணப்படுகிறது!

ரூபாய்க்கு 2 அணா விதம் போனஸ்

கொடுக்கலாமென்று அபிப்ராயப்படுகிறார்.

உடனே சேருங்கள்!

வி. ஸ்ரீநிவாஸன், காரியதரிசி.

Regd. No. M. 3473



Printed by K. Sadagopachariar at the Liberty Press, 10, Linghi Chetty St. Edited & Pu...
Mr. M. S. Sabhesan, M.A., for "The South India Teachers' Union." 520, High Road, Triplicane Madras